**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆவணித்திங்கள் 17 ம் நாள்

**இ.ம.எண். 8/2025**

**in**

**அ.வ.எண். 94/2020**

முத்துலட்சுமி ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

/எதிர்/

1. N.சிவக்குமார் ... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி

2. சுசீலா
3. பழனிச்சாமி ... எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 25.08.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகசாமி, B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சுப்பிரமணியன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு சாட்சி–1 ஆன 1ம் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

i) அசல் வழக்கானது 1ம் எதிமனுதாரர்/வாதியால் மனுதாரர் மற்றும் மற்ற பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாதி தரப்பு முடித்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை முக்கியமான சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. அப்போது தான் மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்க இயலும்.

ii) வாதி தரப்பு சாட்சி–1 ஆன 1ம் எதிர்மனுதாரர்/வாதியை நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு பொருளால் ஈடு செய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே வாதி தரப்பு சாட்சி–1 ஆன 1ம் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:—**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) அசல் வழக்கானது தற்போது பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்கு போடப்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை சில முக்கியமான சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும் அப்போது தான் பிரதிவாதி/மனுதாரர் தனது வழக்கை நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலும் என்பது பொய்யான சங்கதியாகும். இம்மனுவானது நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கும் நோக்கத்துடனும், வாதியை அலைக்களிக்கும் நோக்கத்துடனும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) 1ம் எதிர்மனுதாரர்/வாதியை விசாரிக்க மனுதாரர் தரப்பில் எந்தவொரு முக்கியமான காரணத்தையும் குறிப்பிடப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியை மறு விசாரணை செய்ய மனுதாரரிடம் எந்தவொரு அடிப்படை காரணமோ, ஆவணமோ இல்லை. எனவே மனுதாரருக்கு மனுவில் தகுந்த காரணமோ சட்ட சமச்சீர் நிலையோ இல்லாமல் இருப்பதால் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்

3. மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை முக்கியமான சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும் அப்போது தான் மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்க இயலும் என்றும் எனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை விசாரிக்க மனுதாரர் தரப்பில் எந்தவொரு முக்கியமான காரணத்தையும் குறிப்பிடப்படவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியை மறு விசாரணை செய்ய மனுதாரரிடம் எந்தவொரு அடிப்படை காரணமோ, ஆவணமோ இல்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர் மற்றும் மற்ற பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டு, கடந்த 15.09.2021 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 12.02.2024 அன்று அசல் வழக்கில் தாவா சொத்து விபரத்தை பொறுத்து திருத்தம் செய்யக்கோரி இ.ம.எண்.2/2024 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு கடந்த 07.06.2024 அன்று அனுமதிக்கப்பட்டு, கடந்த 12.09.2024 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 04.12.2024 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 20.01.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1, 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 31.01.2025 அன்று வா.சா.1 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. பின்னிட்டு வாதி தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் ரீகால் செய்து கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய அனுமதி கோரி இ.ம.எண்.4/2025, 5/2025 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 04.07.2025 அன்று மேற்படி மனுக்கள் அனுமதிக்கப்பட்டு வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 10.07.2025 அன்று வா.சா.1 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 15.07.2025 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு கடந்த 18.07.2025 அன்று வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 22.07.2025 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, கடந்த 04.08.2025 அன்று அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ ரீகால் செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை விசாரிக்க மனுதாரர் தரப்பில் எந்தவொரு முக்கியமான காரணத்தையும் குறிப்பிடப்படவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியை மறு விசாரணை செய்ய மனுதாரரிடம் எந்தவொரு அடிப்படை காரணமோ, ஆவணமோ இல்லை என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரத்திற்காக 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்/பிரதிவாதி மற்றும் மற்ற பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும், தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும், அசல் வழக்கில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு போதிய வாய்ப்புகள் வழங்கியும் தற்போது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் ரீகால் செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 1ம் எதிர்மனுதார்/வாதிக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/1ம் பிரதிவாதி, 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 08.09.2025ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 08.09.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.02 17:47:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.02 17:47:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.